டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 19.07.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 027 - Madurai | Online Edition

# முதன்முறையாக பிரீமியம் அரேகோ செர்ரி, சென்ட்ரோஸ் பிளம்ஸ்

## ஜம்மு-காஷ்மீரில் இருந்து சிங்கப்பூருக்கு ஏற்றுமதி

புது தில்லி, ஜூலை 18

ஜம்மு-காஷ்மீரின் தோட்டக்கலை ஏற்றுமதிகளுக்கு மற்றொரு குறிப்பிடத்தக்க ஊக்கமளிக்கும் வகையில், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (அபேடா), ரேபியான் மற்றும் புல்வாமா விலிருந்து சிங்கப்பூருக்கு பிரீமியம் அரேகோ செர்ரி (உயர் அடர்த்தி கொண்ட ஐரோப்பிய இனிப்பு செர்ரி) மற்றும் சென்ட்ரோஸ் பிளம்ஸ் பழங்களை ஏற்றுமதி செய்ய உதவியது. இப்பகுதியில் இருந்து ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அபுதாபி மற்றும் துபாய்க்கு புதிய செர்ரி மற்றும் பிளம்ஸ் வெற்றிகரமாக ஏற்றுமதி செய்யப்பட்டதை தொடர்ந்து இந்த மைல்கல் நிகழ்வு அமைந்துள்ளது. இது காஷ்மீரின் பிரீமியம் பழங்களின் உலகளாவிய தடத்தை மேலும் விரிவுபடுத்துகிறது.

ஒசம் ஃபுட் சொல்யூன்ஸ் எல்எல்பி, புல்வாமாவின் ஃப்ரூட் மாஸ்டர் அக்ரோ ஃப்ரெஷ் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து 2026 ஜூலை 16 அன்று சிங்கப்பூருக்கான முதல் ஏற்றுமதியை அபேடா மேற்கொண்டது.

ஜம்மு & காஷ்மீர், அதன் சாதகமான வேளாண்-பருவ நிலைமைகளுக்கு பெயர் பெற்றது, சிறந்த சுவை, அமைப்பு மற்றும் அடுக்கு ஆயுள் கொண்ட உயர்தர பழங்களை உற்பத்தி செய்கிறது. ஏற்றுமதி சரக்கு சிங்கப்பூருக்கு வந்தவுடன் புத்துணர்ச்சியையும் தரத்தையும் உறுதி செய்வதற்காக சர்வதேச உணவு பாதுகாப்பு மற்றும் பைட்டோசானிட்டரி தரங்களுக்கு இணங்க ஒரு திறமையான குளிர் சங்கிலி மூலம் அறிவியல் ரீதியாக அறுவடை செய்யப்பட்டு, தரப் படுத்தப்பட்டு, பேக் செய்யப்பட்டு கொண்டு செல்லப்படுகிறது.

# ATMA திட்டத்தின் மூலம் சோழவரம் வட்டார விவசாயிகளுக்கு உள் மாநிலப் பயிற்சி

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டத்தின் கீழ், திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் வட்டாரத்தைச் சேர்ந்த 30 விவசாயிகளுக்கு கோயம்புத்தூரில் அமைந்துள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தில் ‘சமச்சீர் ஊட்டச்சத்து மற்றும் பூச்சி மேலாண்மையுடன் கூடிய இயற்கை வேளாண்மை‘என்ற தலைப்பில் உள் மாநிலப் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு விவசாயிகளை வழியனுப்பும் நிகழ்ச்சி ந.பூமதி, வேளாண்மை உதவி இயக்குநரின் வழிகாட்டுதலின்படி நடைபெற்றது. இதில் பால்ராஜ், வேளாண்மை துணை இயக்குநர் கொடியசைத்து பயிற்சியைத் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் ரமேஷ், வேளாண்மை உதவி இயக்குநர் (பயிர்க் காப்பீடு), துணை வேளாண்மை அலுவலர், வேளாண்மை விதை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளை வாழ்த்தி வழியனுப்பினர்.

பயிற்சியின் தொடக்க விழாவில் நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் முரளி அர்த்தநாரி இயற்கை வேளாண் மையில் களை மேலாண்மை குறித்து உரையாற்றினார். களைகள் வளராமல் தடுப்பதே சிறந்த மேலாண்மை முறை யாகும் என்றும், மூடாக்கு அமைத்தல், ஊடுபயிர் சாகுபடி, களைக் கருவிகளைப் பயன்படுத்துதல், களைகள் பூக்கும் முன் அகற்றுதல் மற்றும் முதல் 40 நாட்கள் வயலை களையின்றி பராமரித்தால் மகசூல் இழப்பைத் தவிர்க்கலாம் என்றும் விளக்கினார்.

தொடர்ந்து தோட்டக்கலைத் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் ஹரிப்ரியா, பீஜாமிர்தம், ஜீவாமிர்தம், பஞ்சகவ்யம், 3றூ கரைசல் ஆகியவற்றின் பயன்கள், இயற்கை வேளாண்மை சான்றிதழ் பெற நிலத்தை பராமரிக்கும் முறைகள் மற்றும் நுண்தளிர் கீரை (Microgreens) சாகுபடி மூலம் கூடுதல் வருமானம் ஈட்டும் தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

பூச்சியியல் துறையின் பேராசிரியர் முனைவர் எம்.சுகந்தி, இயற்கை வேளாண்மையில் குறைந்த செலவில் வீட்டிலேயே தயாரிக்கக்கூடிய இயற்கை பூச்சி மற்றும் நோய் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கமளித்தார். குறிப்பாக 3ஜி கரைசல் தயாரிக்கும் முறையை விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கத்துடன் எடுத்துரைத்தார்.

அதன்படி, இஞ்சி, பூண்டு மற்றும் பச்சை மிளகாய் ஆகியவற்றை சம அளவில் எடுத்து தனித்தனியாக அரைத்து பின்னர் ஒன்றாக கலந்து கரைசல் தயாரிக்க வேண்டும். இந்தக் கரைசலை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி என்ற அளவில் கலந்து பயிர்களில் தெளித்தால் பூச்சி தாக்குதலை இயற்கை முறையில் கட்டுப் படுத்தலாம் என்று விளக்கினார்.

வேளாண்மையியல் (Agronomy) துறையின் பேராசிரியர் முனைவர் சி.சிவகுமார், இயற்கை வேளாண்மையில் சமச்சீர் ஊட்டச்சத்து மேலாண்மையின் அவசியம் மற்றும் மண் வளத்தைப் பாதுகாக்கும் நடைமுறைகள் குறித்து எடுத்துரைத்தார்.

மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையின் பேராசிரியர் முனைவர் பி.ஜானகி, மண்ணில் நுண்ணுயிர் களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் முறைகள், அவற்றின் பயன்கள் மற்றும் மண் வள மேம்பாட்டிற்கான தொழில் நுட்பங்கள் குறித்து விரிவாக விளக்கினார்.

பயிற்சியின் நிறைவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆகியோர் இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, பயிற்சி ஏற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டு நிகழ்ச்சியை வெற்றிகரமாக நிறைவு செய்தனர்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வெப்பத்தைத் தாங்கும் பயிர் மேலாண்மை உத்திகள்



இராணிப்பேட்டை, ஜுலை 18

வெப்பநிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க சில உத்திகளைப் பின்பற்றலாம் என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் திலகவதி தெரிவித்துள்ளார். விவசாயம் என்பது வானிலையோடு பின்னிப் பிணைந்த ஒரு தொழில். சூரிய ஒளி, மழைப்பொழிவு ஆகியவற்றுடன், பயிர் வளர்ச்சிக்கும் அதன் மகசூலுக்கும் வெப்பநிலை மிக முக்கியமான காரணியாகும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் பயிர் வளருமா என்பதைத் தீர்மானிப்பதில் வெப்பநிலை முதன்மை யான பங்கு வகிக்கிறது. மேலும், பயிர் உற்பத்தியில் 50% க்கும் மேல் வெப்பநிலையைப் பொறுத்தே அமைகிறது.

**வெப்பநிலை ஏற்றத்தாழ்வுகளின் விளைவுகள்**

ஒவ்வொரு பயிரும் வளர ஒரு குறிப்பிட்ட வெப்பநிலை வரம்பு அவசியம். வெப்பநிலை இந்த வரம்புகளிலிருந்து விலகும் போது, பயிர் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. உதாரணமாக, நெல் போன்ற பயிர்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை அதிகரிக்கும் போது, தானிய வளர்ச்சி பாதிக்கப்பட்டு மகசூல் குறையலாம்.

குறைந்த வெப்பநிலை, பயிரின் வளர்ச்சி, செல் விரிவாக்கம், ஒளிச்சேர்க்கை மற்றும் உயிர்வாழ்வு போன்ற பல அம்சங்களை எதிர்மறையாகப் பாதிக்கலாம். கடுமையான குளிர், உறைபனி மற்றும் மூச்சுத் திணறல் போன்ற பல்வேறு வகையான குறைந்த வெப்பநிலை பாதிப்புகள் பயிர்சுவாசத்தில் இடையூறு ஏற்படுத்தி பயிர்களை வாடச் செய்து, இறப்பு நேரிடலாம்.

**பூச்சி மற்றும் நோய் மேலாண்மையில் வெப்பநிலையின் தாக்கம்**

பூச்சிகளின் எண்ணிக்கையையும், பரவலையும் தீர்மானிக்கும் மிக முக்கியமான சுற்றுச்சூழல் காரணி வெப்பநிலை ஆகும்.

வெப்பநிலை அதிகரிப்பு பூச்சிகளின் புவியியல் பரவலை அதிகரிக்கலாம், குளிர்காலத்தில் அவற்றின் உயிர்வாழும் திறனை மேம்படுத்தலாம், தலைமுறைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். மேலும், இது அயல்நாட்டு பூச்சி இனங்கள் மற்றும் பூச்சி மூலம் பரவும் பயிர் நோய்களின் அபாயத்தையும் அதிகரிக்கலாம். குளிர்காலத்தில் ஏற்படும் அசாதாரண வெப்பம், சில இடம்பெயரும் பூச்சிகள் விரைவில் பிரச்னையாக மாற வழிவகுக்கும்.

**வெப்பநிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க சில உத்திகளைப் பின்பற்றலாம்**

**மண் ஈரப்பதம்**

மண்ணில் போதுமான ஈரப்பதம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மண்ணின் மேற்பரப்பில் மூடாக்கு (mulch) இடுவது, அதிக வெப்பம் மற்றும் குளிர் இரண்டிலிருந்தும் பாதுகாத்து, நீரின் ஆவியாதலைக் குறைக்கும்.

**நிழல் வலைகள்**

கோடைக்காலத்தில் பயிர்களை அதிக வெப்பத்திலிருந்து பாதுகாக்க நிழல் வலைகள் அல்லது சிறு மரங்களின் நிழல் களை பயன்படுத்தலாம்.

**வெப்பத்தைத் தாங்கும் பயிர் வகைகள்**

சிறுதானியங்கள், வறட்சியைத் தாங்கும் நெல் வகைகள் போன்ற காலநிலைக்கேற்ற பயிர் வகைகளைத் தேர்வு செய்வது சவால்களைச் சமாளிக்க உதவும்.

**பயிர்களுக்கான தெளிப்பு**

5% காயோலின் (Kaolin) கரைசலைத் தெளிப்பதன் மூலம் இலைகளின் வெப்பநிலையைக் குறைத்து, அதிகப்படியான நீராவிப்போக்கைத் தடுக்கலாம். பயிர்களுக்கு வெப்பத்தைத் தாங்க 'பிங்க் பிக்மென்டட் மெத்திலோட்ரோபிக்' (PPFM - 200ml/ஏக்கர்) தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

**பூசா ஹைட்ரோஜெல் (Pusa Hydrogel)**

இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தால் (�஡புயூ஡) உருவாக்கப்பட்ட ஒரு உறிஞ்சும் பாலிமர் ஆகும். இது மண்ணில் நீரைச் சேமித்து வைத்து, தாவரங்களுக்குத் தேவைப்படும்போது மெதுவாக வெளியிடும் திறன் கொண்டது.

**செயல்பாடு :** இது தனது எடையை விட பல மடங்கு அதிக நீரை உறிஞ்சி சேமிக்கும். இதனால் வறட்சி காலங்களிலும் பயிர்கள் காய்ந்து விடாமல் வளர உதவுகிறது.

**பயன்பாடு :** இது பொதுவாக குருணை (Granules) வடிவில் கிடைக்கிறது. ஒரு ஏக்கருக்கு சுமார் 1 முதல் 2.5 கிலோ வரை பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. இது மண்ணில் ஒரு வருடம் வரை செயல்படும், அதன் பிறகு தானாகவே மட்கிவிடும்.

**நன்மைகள்**

- நீர்ப்பாசனத் தேவையைக் குறைக்கிறது (சுமார் 40-50% நீர் சேமிப்பு).
- உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் நீரில் கரைந்து வீணா வதைத் தடுக்கிறது.
- மண்ணின் ஈரப்பதத்தைத் தக்க வைத்து விளைச்சலை அதிகரிக்கிறது.

**பாசன முறைகள்**

சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் அல்லது வாய்க்கால் பாசனம் போன்ற நேர்த்தியான பாசன முறை களைப் பயன்படுத்துவதன் மூலம் நீரைச் சேமிக்கலாம். கோடையில் நிலத்தடி நீர் மட்டம் குறையும் போது நீரின் உப்புத்தன்மை அதிகரிக்கும். இதைத் தவிர்க்க அடிக்கடி நீர்பாய்ச்ச வேண்டும்.

**விதைப்பு காலத்தை மாற்றுதல்**

வானிலை முன்னறிவிப்புகளின் அடிப்படையில் விதைப்பு காலத்தை சரிசெய்வது, பயிரானது அதிக மழை அல்லது வெப்பத்தைத் தவிர்க்க உதவும்.

வானிலை முன்னறிவிப்புகளைப் பயன்படுத்தி, வேளாண் பெருமக்கள் சரியான முடிவுகளை எடுப்பதன் மூலம், பயிர் இழப்பைக் குறைத்து, மகசூலை அதிகரிக்கலாம். இதன் மூலம் நிலையான மற்றும் லாபகரமான விவசாயத்திற்கு வழி வகுக்கலாம் என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் திருமதி திலகவதி தெரிவிதுள்ளார்.

வாலாஜா வட்டாரத்தில் கத்தாரிக்குப்பம் கிராமத்தில் நெல் மற்றும் நிலக்கடலை வயல் ஆய்வு மேற்கொண்டு விவசாயி களுக்கு பயிர் காப்பீடு செய்ய வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், ஜி. திலகவதி தெரிவித்தார். உதவி வேளாண்மை அலுவலர்கள் மீனாட்சிசுந்தரம் மற்றும் நாகராஜன் உடன் இருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நெல் வயலில் பாசியை கட்டுப்படுத்தும் முறை



திருச்சி, ஜூலை 18

திருச்சிராப்பள்ளி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சாந்தாமணி, லால்குடி வட்டாரம் மும்முடி சோழமங்கலம் கிராமத்தில் குறுவை நெல் சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் பயனாளிகளின் வயல் களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது நெல் வயலில் பாசி காணப்பட்டதால், அதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 2 கிலோ காப்பர் சல்பேட் பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு பரிந்துரை செய்து தொழில்நுட்ப ஆலோ சனைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சத்தியப்பிரியா, உதவி வேளாண்மை அலுவலர் சந்திரசேகர், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரிச்செல்வன் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் ஆகியோர் உடனிருந்தனர்.

# புதுக்குளம் கண்மாய் தூர்வாரும் பணி துவக்கம்



தேனி, ஜூலை 18

தேனி மாவட்டம், உத்தமபாளையம், தேவாரம் பேரூராட்சியின் மேற்புறம் அமைந்துள்ள புதுக்குளம் கண்மாயை பாராசூட் கல்பவிருக்க்ஷ அறக்கட்டளை மற்றும் புதுக்குளம் கண்மாய் விவசாயிகள் இணைந்து தூர்வாரும் துவக்க பணி 18-07-26 பூமி பூஜையை கம்பம் சட்டமன்ற உறுப்பினர் மனிதநேயர் PLA. ஜெகநாத் மிஸ்ரா தலைமையில் நடைபெற்றது. இப்பூமி பூஜையில் பாராசூட் கல்ப விருக்க்ஷ அறக்கட்டளை மேலாளர் சாஜி குமார் மற்றும் இணை மேலாளர் பிரதீப் குமார் மற்றும் பாராசூட் கல்பவிருக்க்ஷ அறக் கட்டளை நிர்வாகிகளும் மற்றும் உத்தமபாளையம் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகளும் மற்றும் விவசாய பெருமக்கள் மற்றும் தேவாரம் பேரூர் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நவீன வேளாண்மையில் ஸ்ட்ராபெர்ரி பழங்கள்

இயற்கை விவசாயம் வாயிலாக 19 ஆண்டுகளாக ஸ்ட்ராபெர்ரி பழங்கள் சாகுபடி செய்து வரும் நீலகிரி மாவட்டம், ஊட்டி அருகே உள்ள தாம்பட்டி கிராமத்தை சேர்ந்த 56 வயதான சிவகுமார் அது பற்றி விளக்கமாகச் சொல்கிறார்.

**இரசாயனத்தில் இருந்து இயற்கைக்கு**

தாம்பட்டி கிராமம் தான் என் சொந்த ஊர் டிப்ளமோ எலக்ட்ரானிக்ஸ் அண்டு கம்யூனிகேசன் இஞ்சினியரிங் படித்து விட்டு ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையில் சில ஆண்டுகள் வேலை பார்த்தேன். என் தாத்தாவுக்குப்பின் விவசாயத்தைக் கவனிக்க யாரும் இல்லாததால் 1998ல் விவசாயத்தில் ஈடுபட்டு காய்கறிகள் சாகுபடி செய்து வந்தேன். பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த இயற்கை வேளாண் செயற்பாட்டாளர் வேனியா என்ற பெண் 2000வது ஆண்டு இங்கு வந்து இயற்கை விவசாயம் குறித்து தக்க விழிப்புணர்வை எனக்கு ஏற்படுத்தினார்.

அதில் ஈர்க்கப்பட்ட நான் அப்போதிருந்து இயற்கை விவசாயம் செய்யத் தொடங்கினேன். அந்த முறையில் ஸ்ட்ராபெர்ரி பழங்கள் சாகுபடியில் அதுவரை எவரும் பார்த்திராத லாபம் எனக்கு கிடைத்ததைப் பார்த்து எங்கள் பகுதி விவசாயிகள் மிகவும் ஆச்சரியப்பட்டனர். அதில் ஈர்க்கப்பட்ட நான் அப்போதி லிருந்து இயற்கை விவசாயம் செய்யத் தொடங்கினேன்.

கடந்த 2006 ல் 20 செண்ட் பரப்பில் இயற்கை முறையில் ஸ்ட்ராபெர்ரி சாகுபடியைத் தொடங்கினேன். அந்த முறையில் ஸ்ட்ராபெர்ரி நாற்றுகளை மகாராஷ்டிரா மாநிலம் புனேயில் இருந்து வாங்கி வந்து நடவு செய்வேன். ஒரு முறை பயிர் செய்து கண்ணும் கருத்துமாக பராமரிப்பு செய்தால் 2 ஆண்டுகள் வரை மகசூல் நல்ல லாபத்தில் எடுக்க முடியும். அதற்கு நான் பின்பற்றிய முறைகள் இவை தான்.

இயற்கை இடுபொருட்கள் தேவைக்காக நாட்டு மாடுகள் வளர்க்கிறேன். இயற்கை இடுபொருட்கள் பயன்படுத்துவதால்

மண் நன்கு வளமடைந்து றைய மண்புழுக்கள் உருவாகின்றன. காய்ப்பு சீசனில் தினமும் பழங்களை அறுவடை செய்து உடனடியாக விற்பனை செய்ய வேண்டும்.

மார்ச் முதல் மே மாதம் வரை அதிக மகசூல் கிடைக்கும். ஸ்ட்ராபெரி சாகுபடியில் விதைப்பு முதல் அறுவடை வரையும் பின்னர் விற்பனைக்குச் செல்வது வரையும் உரிய கவனம் செலுத்தினால் வளமான வருமான லாபம் என்பது நிச்சயம்.

**விற்பனையும் லாபமும்**

ஸ்ட்ராபெரி (பழங்களின்) காய்ப்பு சீசனில் தினமும் பழங்களை அறுவடை செய்வது முக்கியமானது எனக் குறிப்பிட்டேன். அல்லவா ! அப்போது ஒவ்வொரு செடியில் இருந்தும் 700 கிராம் வரை பழங்கள் கிடைக்கும் 4400 செடிகளில் இருந்து நான் எடுக்கும் மகசூல் என்பது 2860 சராசரியான எண்ணிக்கையிலான ஸ்ட்ராபெர்ரி பழ அறுவடை ஆகும். இது தொடக்க காலங்களில் 10 முதல் 15% கூடுதலாகவும் அமைவதுண்டு.

செடிகளில் இருந்து பறித்தெடுத்த பழங்களை இரண்டு நாட்களுக்குள் சாப்பிட்டால் தான் நல்ல சுவையாக இருக்கும். அதனால் தான் பழங்களைப் பறிந்தும் உடனடியாக பேக்கிங் செய்து விற்பனைக்கு அனுப்பி விடுவேன்.

இயற்கை அங்காடி களுக்கு மட்டுமே விற்பனை செய்வதால் குறைந்த பட்சம் கிலோவுக்கு 400 முதல் 450 ரூபாய் விலை கிடைக்கிறது. அந்த வகையில் 2800 கிலோ பழங்களின் விற்பனை மூலமாக எனக்கு ஆண்டுக்கு 11 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும். எல்லா செலவுகளும் போக நான் ஸ்ட்ராபெர்ரி சாகுபடியில் ஆண்டுக்கு 6 இலட்சம் லாபம் பார்க்கிறேன்.

தகவல் : *யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை*.



# ஆடிப்பட்டம் தேடி விதை - ஒரு பார்வை

நம்முடைய முன்னோர்களில் செய்யும் ஒவ்வொரு செயலையும் பின்னால் வருகின்ற சந்ததியினர் எளிதாக தெரிந்து கொள்ள ஒவ்வொரு பழமொழிகளை உருவாக்கி உள்ளனர். அதில் ஒன்று தான் வேளாண்மை சம்மந்தப்பட்ட பழமொழி, ஆடிப்பட்டம் தேடி விதை. ஆடிபட்டம் என்பது மானாவாரியாக பயிரிடப்படும் பயிர்களுக்கு உகந்தது.



அதனால் தான் என்னவோ ஆடிபட்டத்தை தேடி பிடித்து ஆடி பெருக்கு (ஆடி 18) விதைகளை தேடி பிடித்து விதைக்க வேண்டும் என்று சொல்லி வைத்தனர்.




**ஆடியும் முளைப்பாரியும்?**

இது ஏதோ மத சம்மந்தப்பட்ட நிகழ்வு அல்ல. இந்த காலத்தில் இருக்கிற மாதிரி அந்த காலத்தில் விதை பரிசோதனை நிலையங்கள் இல்லை. தங்களுடைய வீடுகளில் உள்ள விதைகளை முளைப்பாரி மூலமாக விதைக்கப்பட்டு 8 நாட்களில் அவை செழித்து வளர்ந்தால் தங்களுடைய விதைகளை விதைக்க தொடங்கி விடுவார்கள். சரிவர முளைப்பு இல்லாத நிலையில் பக்கத்து வீடு, ஊரில் வாங்கி பயன்படுத்திடுவார்கள். இந்த காலம் போல விதைக்காக யாரிடமும் கையேந்த வில்லை நம்முடைய முன்னோர்கள். தற்சார்பு வேளாண்மை தான் மேற்கொண்டு வந்தனர்.

**சித்திரை மாத உழவு**

விவசாயிகள் சித்திரையில் உழவை ஆரம்பித்து தொடர்ந்து 7 உழவு போட்டால் எரு போட வேண்டியதில்லை என்பதற் கிணங்க அழுதுகிட்டே இருந்தாலும்கூட நம்முடைய விவசாயிகள் உழவு தொடர்ச்சியாக போட்டு வந்தனர்.

பட்டம் தப்பினால் நஷ்டம்? என்பதற்கிணங்க ஆடியில் (ஜுலை – ஆகஸ்ட்) மாதங்களில் விதைக்க தொடங்கி விடுவார்கள். இது அவர்களின் அசைக்க முடியாத நம்பிக் கையாக உள்ளது. ஆடி, ஆவணி மாதங்களில் மிதமான மழைபொழிவு இருப்பதால் மானாவாரியாக பயிரிடப்பட்ட பயிர்கள் செழித்து வளரும். இன்று மழை குறைந்து, நீர்ப்பாசனம் அரிதாகி மண் வளம் குறைந்து போனாலும் காலநிலை மாற்றத்தால் பெரும் விளைவுகள் ஏற்பட்டாலும் பெரும்பாலான விவசாயிகள் ஆடி பதினெட்டில் விதைக்க தொடங்குவதில் ஆர்வமாக உள்ளனர். இன்னும் அவர்களின் நம்பிக்கை நிஜமாக இறைவனை வேண்டுவோம்.

**ஆடி பட்டத்தில் விதைப்பதால் என்ன நன்மைகள்**

1) ஓரளவு மழை பொழிவு இருப்பதால் பயிரிடப்பட்ட பயிர்கள் நன்றாக வளரும்.

2) பூச்சி/பூஞ்சான தாக்குதல் குறைவு.

ஆடி காற்றிலே அம்மியும் பறக்கும் என்பது போல பயிரிட பட்ட தாவரங்களில் பூச்சி பூஞ்சான தாக்குதல் குறைவாக இருக்கும்.

**3) அறுவடைக்காலம்**

ஆடியில் விதைத்த பயிர்கள் வடகிழக்கு பருவமழை தொடங்கும் முன்னதாக அறுவடைக்கு வந்து விடும். அறுவடையின் போது தொடர் மழைக்கு வாய்ப்பு குறைவே. மழையை எதிர்பார்த்து காத்திருப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# உளுந்து பயிரில் மகசூல் அதிகரிக்க உயர் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தான களப்பயிற்சி



விருதுநகர், ஜுலை 18

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி வட்டாரத்தில் விவசாயிகள் அதிகளவில் உளுந்து சாகுபடி செய்து வருகின்றனர். ஊராட்சி மன்ற வளாகம், நரிக்குடியில் உளுந்து விவசாயிகளுக்கான கள பயிற்சி 'உளுந்து சாகுபடியில் உயர் பயிர் தொழில் நுட்பங்கள்' என்ற தலைப்பில் வேளாண் அறிவியல் நிலையம், அருப்புக்கோட்டை மற்றும் வேளாண்மை துறை இணைந்து 15.07.26 ஆண்டு நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் உயர் விளைச்சல் ரகங்கள், விதை நேர்த்தி, வரிசை நடவின் முக்கியத் துவம், ஒருங்கிணைந்த ஊட்ட சத்து மேலாண்மை, ஒருங் கிணைந்த களை மேலாண்மை குறித்த தொழில்நுட்ப உரைகள் வழங்கப்பட்டன. உளுந்து பயிரில் மகசூல் அதிகரிக்க 'பயறு அதிசயம்' இலை வழி தெளிப்பு குறித்தும் உதவி பேராசிரியர் முனைவர் த.சம்பத்குமார் எடுத்துரைத்தார். வேளாண் அறிவியல் நிலைய தலைவர் முனைவர் மு.சுப்ரமணியன், பயிற்சியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். நரிக்குடி வட்டார வேளாண் உதவி இயக்குனர் மற்றும் வீரபாண்டி அட்மா அலுவலரும் பயிற்சியினை ஏற்பாடு செய்தனர். இப்பயிற்சியில் 30க்கும் மேற்பட்ட விவசாய பெருமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கிசான் கோஸ்திஸ் மற்றும் வயல் விழா கருத்து கண்காட்சி குறித்த விவசாயிகள் கூட்டம்




சிவகங்கை, ஜூலை 18

சிவகங்கை மாவட்டம், சிங்கம்பணரி வட்டாரம், வேளாண்மைத் துறையின் மூலமாக மாநில விரிவாக்க சீரமைப்பு திட்டம் – அட்மா திட்டத்தின் கீழ் 17.07.26 அன்று கிசான் கோஸ்திஸ் மற்றும் கருத்து கண்காட்சி நிகழ்ச்சி ஏரியூர் கிராமத்தில் பொ.செல்வம் வேளாண்மை துணை இயக்குநர் (உபநி), சிவகங்கை தலைமையில் நடைபெற்றது.

இதில் வேளாண் துணை இயக்குநர் செல்வம் தலைமை வகித்துப் பேசியதாவது, ரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்து களுக்கு மாற்றாக இயற்கை பூச்சி விரட்டிகள், இயற்கை உரங்கள் அதிகளவில் உள்ளன. இவற்றைத் தயாரிக்கும் முறைகள் குறித்து விவசாயிகள் அறிந்து கொண்டு, நஞ்சு இல்லாத உணவு தானியங்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்றார் மற்றும் அட்மா திட்ட செயல்பாடுகள் பற்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடை துறை, மீன்வளத் துறை, வனத்துறை, வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் வருவாய்த் துறையி லிருந்து தொழில்நுட்பம் மற்றும் திட்டங்கள் சம்பந்தமாக விவசாயிகளுடன் பயிற்சி வழங்கி கலந்துரையாட துறை வாரியாக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் சிங்கம்புணரி வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) நா.ஞானவேல், வரவேற்று பேசி மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்கள் மற்றும் இயற்கை வேளாண்மை, உயிர் உரங்கள் பயன் பாடுகள் மேலும் தற்பொழுது மாவட்டம் முழுவதும் நடைபெற்று கொண்டிருக்கும் விவசாயிகள் தரவுகள் பதிவுகள் பற்றியும் மேலும் மின்னனு பயிர் சாகுபடி கணக்கெடுப்பு (Digital crop survey) விவசாயிகளுக்கு விரிவான முறையில் எடுத்துரைத்தார். ப.சீனி வாசன், இயற்கை வேளாண்மை மண் மாதிரி சேகரித்தல் மற்றும் மண் ஆய்வின்படி விவசாயிகள் உரமிடல் வேண்டும். மேலும் நெல் ரகங்கள் தேர்வு குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

பிரவின்ராஜ், வனவர், வனத்துறை, பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு வனத்துறையின் திட்டங்கள் பற்றியும் அதன் மானிய விபரங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

வேளாண் அறிவியல் நிலையம், குன்றக்குடி, முனைவர் மற்றும் தலைவர் கோ.ப.சரவணன், அறிவியல் நிலையத்தில் நடைபெற்று கொண்டிருக்கும் வேளாண் சார்ந்த தொழில் பயிற்சிகள் மற்றும் வேளாண் விலை பொருட்கள் மதிப்பு கூட்டி சந்தைபடுத்துதல் போன்ற அனுகுமுறைகள் பற்றி பேசி விவசாயிகளுடன் கலந்துரையாடி விவசாயிகளுக்கான சந்தேகங்களை நிவர்த்தி செய்தார்கள்.

மேலும் எல்நினோ 2026 எனப்படும் பருவநிலை மாற்றத்தி லிருந்து விவசாயத்தை பாதுகாக்க வழிமுறைகள் பற்றி கூறினார். மற்றும் வேளாண் அறிவியல் நிலையம் குன்றக்குடி உதவி பேரா சிரியர் சேதுபதி, பயிர் சாகுபடி முறைகள் கடைபிடிக்க வேண்டிய நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய இரகங்கள் அறிமுகம் குறித்து எடுத்துரைத்தார், பயிர் சாகுபடி முறைகள், விதை தொழில் நுட்பம். பயிர் பாதுகாப்பு மற்றும் களை கட்டுபாடு, வேளாண் சூழலியல் மற்றும் பருவநிலை மாற்றம் போன்ற தொழில்நுட்பங் களை விவசாயிகளுக்கு விரிவான முறையில் எடுத்துக் கூறினார். தோட்டக்கலைத் துறை சார்பாக தோட்டக் கலை உதவி இயக்குநர் சி.பிரவின்குமார், தோட்டக்கலை சார்ந்த திட்டங்களை விவசாயி களுக்கு விரிவான முறையில் எடுத்துரைத்து கலந்துரையாடினார்.

கால்நடை துறை சார்பாக கலந்து கொண்ட கால்நடை உதவி மருத்துவர் சுகனியா கால்நடை துறையில் செயல் படுத்தப் படும் திட்டங்களை பற்றி விரிவான முறையில் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். மீன்வளத் துறை சார்பாக கலந்து கொண்ட மு.அருர், மீன்வளத் துறையில் செயல் படுத்தி வரும் திட்டங்களை பற்றி விரிவான முறையில் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் சே.பாஸ்கர் கலந்து விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

இறுதியில் உதவி வேளாண்மை அலுவலர் ம.மாமுண்டீஸ்வரன், விவசாயிகளுக்கான நில உரிமை அடையாள எண் பதிவு செய்து இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து துறை அலுவலர் களுக்கும் கிராம விவசாய மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாட்டினை வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.கருஷ்ணசாமி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பூ.அழகுசுந்தரம் செய்திருந்தனர்.

# பூச்சிக்கொல்லி மருந்துகளின் காத்திருப்பு காலம்

காத்திருப்பு காலம் (Waiting Period / Pre-Harvest Interval - PHI) என்பது பயிர்களுக்கு பூச்சிக்கொல்லி அல்லது பூஞ்சாணக் கொல்லி மருந்துகளைத் தெளித்த தேதியிலிருந்து, விளைச் சலை அறுவடை செய்வதற்கு இடைப்பட்ட பாதுகாப்பான கால அளவு ஆகும்.

**நோக்கம்**

**நச்சுத்தன்மை குறைதல்**

தெளிக்கப்பட்ட இரசாயன மருந்து, சூரிய ஒளி மற்றும் காற்றினால் சிதைவடைந்து, மனிதர்களுக்குப் பாதிப்பில்லாத அளவிற்கு மாறுவதற்குஇந்த அவகாசம் தேவைப்படுகிறது.

**பாதுகாப்பான உணவு**

● காத்திருப்பு நாட்கள் கடந்த பின்பு அறுவடைசெய்யப்படும் காய்கறிகள், பழங்கள் மற்றும் தானியங்களில் நச்சு எச்சங்கள் இருக்காது.

● தக்காளியில் ஒரு பூச்சிக்கொல்லி மருந்தை தெளித்தால் அந்த மருந்து பாட்டிலில் காத்திருப்பு காலம் '3 நாட்கள்' என்று குறிப்பிடப்பட்டிருந்தால், மருந்து தெளித்த பின் 3 நாட்களுக்கு தக்காளியை அறுவடை செய்யக்கூடாது. 4-ஆம் நாளில் தான் அறுவடை செய்ய வேண்டும்.

● ஒவ்வொரு மருந்து பாட்டிலின் பின்புறம் உள்ள துண்டுப் பிரசுரத்திலும் (Leaflet) அந்தந்த பயிருக்கான காத்திருப்பு நாட்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**காத்திருப்பு காலம் கணக்கிடல்**

**அதிகபட்ச நச்சு எச்ச வரம்பு**

ஒரு மனிதன் தனது வாழ்நாளில் தினமும் எந்த உணவைச் சாப்பிட்டாலும் உடலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், உணவில் இருக்கக்கூடிய பூச்சிக்கொல்லியின் மிக உயர்ந்த சட்டப்பூர்வ வரம்பு இதுவாகும். இது 'Parts Per Million' என்ற அலகால் அளவிடப்படுகிறது.

### அரை ஆயுட்காலம்

தெளிக்கப்பட்ட மருந்து தாவரத்தின் உள்ளேயும் வெளியேயும் பாதியாக சிதைவடைய எடுத்துக் கொள்ளும் காலம். மருந்தின் நச்சு அளவு MRL வரம்பிற்கு கீழே குறையும் நாளே காத்திருப்பு காலமாக (PHI) அறிவிக்கப்படுகிறது.

### காத்திருப்பு காலத்தை பாதிக்கும் காரணிகள்

ஒரே மருந்து வெவ்வேறு சூழ்நிலைகளில் மாறுபட்ட காத்திருப்பு காலத்தைக் கொண்டிருக்கலாம்.

### பயிரின் வகை

தக்காளி போன்ற மென்மையான தோல் கொண்ட காய்கறிகளில் மருந்து வேகமாக உறிஞ்சப்படும். ஆனால் நெல், பருப்பு போன்ற கடினமான தோல் அல்லது உமி கொண்ட பயிர்களில் நச்சு குறைய அதிக நாட்கள் ஆகும்.

### பயன்படுத்தும் அளவு

பரிந்துரைக்கப்பட்ட அளவை விடஅதிக மருந்து தெளித்தால், காத்திருப்பு காலமும் பலமடங்கு அதிகரிக்கும்.

### வானிலை

அதிக சூரிய ஒளி மற்றும் மிதமான மழை இருந்தால் மருந்து விரைவாக சிதைவடையும். மேகமூட்டமான மற்றும் குளிர்ச்சி யான காலநிலையில் நச்சுநீண்ட நாட்கள் தங்கியிருக்கும்.

### மருந்தின் வடிவம்

பால்ம (EC) வடிவ மருந்துகள் தாவரஇலைகளில் நீண்ட நாட்கள் ஒட்டியிருக்கும், அதனால்அவற்றிற்கு அதிக காத்திருப்பு காலம் தேவைப்படும்.

### முக்கிய பூச்சிக்கொல்லிகளின் காத்திருப்பு காலம்

மருந்தின் பெயர், பரிந்துரைக்கப்படும் பயிர்கள், காத்திருப்பு காலம் (நாட்கள்) பின் வருமாறு :

நியோனிகோடினாய்டுகள் (எ.கா: Imidacloprid, Thiamethoxam) நெல், பருத்தி, காய்கறிகள் 7 – 14 நாட்கள்

ஸ்பினோசாட் கத்தரி, தக்காளி, மிளகாய் 3 – 5 நாட்கள்

டயமைடுகள் (எ.கா: Chlorantraniliprole) நெல், கரும்பு, காய்கறிகள் 14 – 21 நாட்கள்

கார்டாப்ஹைட்ரோகுளோரைடு நெல்14 – 19 நாட்கள்

புரோஃபெனோஃபாஸ்(ஊஷெலிக்ஷீளஜலிக்ஷீலிவி) பருத்தி, மிளகாய் 14 நாட்கள்

இவ்வாறு விவசாயிகள் பயனடையுமாறு தாரமங்கலம் வேளாண்மை துறை மூலம் கேட்டுக்கொள்கிறோம்.



# ICAR தரிசு நிலத்தில் பிரம்பு சாகுபடி

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (ICAR) இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் வழிகாட்டுதல்களின்படி, பிரம்பு (Cane/Rattan) என்பது காடுகளின் மரங்கள் சூழ்ந்த ஈரப்பதமான சூழலில் வளரும் ஒரு வகைக் கொடித் தாவரமாகும்.

நேரடி சூரிய ஒளி படும் திறந்தவெளி தரிசு நிலங்களை விட, நிழல் மற்றும் அதிக ஈரப்பதம் உள்ள தரிசு நிலங்களில்தான் பிரம்பு சாகுபடி சிறப்பாக வளரும்.

**பிரம்பு சாகுபடிக்கான முக்கிய குறிப்புகள்**

**மண் மற்றும் தட்பவெப்ப நிலை**

வடிகால் வசதியுள்ள களிமண் மற்றும் வண்டல் மண் மிகவும் உகந்தது. நிழலான ஈரப்பதமான பகுதிகள் (சதுப்பு நிலங்கள் அல்லது மரங்கள் அடர்ந்த பகுதிகள்) பிரம்பு வளர்ச்சிக்கு ஏற்றவை.

**இனங்கள் (Species)**

இந்தியாவில் கேலமஸ் (Calamus) மற்றும் டேமனோராப்ஸ் (Daemonorops) போன்ற பல வகைகள் உள்ளன.

**இந்திய ரத்தன்கள் (கேன்கள்)**

பன்முகத்தன்மை, விநியோகம் மற்றும் பரப்புதல். தமிழகச் சூழலுக்கு ஏற்ற வணிக ரீதியான வகைகளை மாநில வனத் துறை அல்லது வேளாண் அறிவியல் நிலையங்களில் (KVK) கேட்டு அறியலாம்.

**வளர்ப்பு முறை**

பிரம்புகள் பொதுவாக விதைகளில் இருந்தோ அல்லது நாற்றங்காலில் வளர்க்கப்பட்ட கன்றுகள் மூலமாகவோ நடப்படுகின்றன.

**ICAR & தேசிய மூங்கில் இயக்கம்**

தரிசு நிலங்களை மேம்படுத்தவும், பிரம்பு போன்ற பயிர்களை வளர்க்கவும் தேசிய மூங்கில் இயக்கம் மூலம் வழிகாட்டு தல்களும், மானிய உதவிகளும் வழங்கப்படுகின்றன.

**சாகுபடி நிலையை மேம்படுத்துதல்**

தரிசு நிலங்களை பசுமையாக்க பிரம்பு போன்ற மரப்பயிர்களை நடுவதன் மூலம் மண் அரிப்பு தடுக்கப்பட்டு, நிலத்தின் ஈரப்பதம் பாதுகாக்கப்படுகிறது.

கட்டுரை : ***வீரபாண்டி கே எஸ் பழனிசாமி, மாநிலத் திட்ட பொறுப்பாளர், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில், பாஜக விவசாய அணி, +91 95433-73204.***

# ரோவர் வேளாண்மைக் கல்லூரியில் கலை விழா 2026 கொண்டாட்டம்

பெரம்பலூர், ஜூலை 18

பெரம்பலூர் ரோவர் வேளாண்மைக் கல்லூரியில் கலை விழா (டிரெஃபெஸ்ட் ) 2026 - 15.07.26 முதல் 17.07.26 வரை நடைபெற்றது.




மூன்று நாட்கள் நிகழ்ச்சிகளுக்கும் ரோவர் கல்விக் குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் முனைவர் கி.வரதராஜன் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். துணைத் தலைவர் ஜான் அசோக் குமார் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் இறைவன் அருட்கனி அய்ய நாதன் மற்றும் இயக்குனர் முனைவர் வஹாப் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

முதல் நாள் நிகழ்வான விளையாட்டு தினத்தில் பெரம்பலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் வி.லலித்குமார், IPS சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார். இரண்டாம் நாள் நிகழ்வாக முத்தமிழ் விழா கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் விஜய் டிவி பட்டிமன்ற நகைச்சுவை பேச்சாளர் இரா.யோகதர்ஷினி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

நாட்டின் வளர்ச்சியை தீர்மானிப்பது வேளாண்மையா அல்லது தொழில்நுட்பமா என்ற தலைப்பில் பட்டிமன்றம் சிறப்பாக நடத்தப்பட்டது. தமிழர்களின் பாரம்பரியத்தை பறைசாற்றும் நிகழ்வான மாடு ஆட்டம், வில்லுப்பாட்டு, கரகாட்டம், காவடி ஆட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், வள்ளி கும்மி, கோலாட்டம், சிலம்பாட்டம் மற்றும் நாடகம் நடைபெற்றது. மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக மன்ற நாள் விழா நடைபெற்றது.


இவ்விழாவில், திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நடிகரும், ஊக்க மூட்டும் பேச்சாளருமான கே.பிரகதீஸ்வரன் சிறப்பு விருந் தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு சிறப்புரை யாற்றினார். இவ்விழாவின் இறுதியாக கலைநிகழ்ச்சிகள், நடனங்கள், இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள் மற்றும் மாணவர் களின் திறமைகளை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள் நடை பெற்றன. மாணவர்களின் படைப்பாற்றல், தலைமைத்திறன் மற்றும் குழு ஒருங்கிணைப்பு திறனை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன. விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர் களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

மாணவர் மன்ற ஆலோசகர் அப்துல் ரகுமான் விழாவினை ஒருங்கிணைந்து நடத்தினார். விழாவின் ஏற்பாடுகளை கல்லூரியின் நிர்வாக அலுவலர் ஜெயசீலன் மற்றும் அலுவலக மேலாளர் திருநாவுக்கரசு சிறப்பாக செய்திருந்தனர்.

# உடுமலை ஓய்வு பெற்ற அலுவலர் கூட்டம்

ஓய்வு பெற்ற அலுவலர் சங்கம், உடுமலைப்பேட்டை கிளை, நிர்வாகிகள் கூட்டம் 18.07.26 அன்று காலை சங்க அலுவலகத்தில் தலைவர் இரா.தட்சிணா மூர்த்தி, தலைமையில் நடைபெற்றது. செயலாளர் சி.குலோத்துங்கன், பேசுகையில் 21.07.26 அன்று பேரவைக் கூட்டம் ஸ்ரீ பாலாஜி திருமண மண்டபத்தில் நடை பெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநிலத் தலைவர் சிவ.திருமேனிநாதன், சிறப்புரை ஆற்ற உள்ளார். புதிய மருத்துவ காப்பீடு திட்டம் 2026 பற்றி விரிவாக பேச உள்ளார். எனவே நிர்வாகிகள் மற்றும் கிளை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

**இவன் உடுமலை கிளை நிர்வாகிகள்.**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# பண்ணை இயந்திரமாக்குதலில் தொழில் முனைவோருக்கான அதிகரித்து வரும் வாய்ப்புகள்

வளர்ந்து வரும் நமது நாட்டில் மக்கள் தொகையினைக் கருத்தில் கொண்டு உணவு உற்பத்தியை பெருக்க வேண்டிய சூழலில் உள்ள இவ்வேளையில் வேளாண்மைப் பணிகளை செய்ய வேலையாட்கள் கிடைப்பது அரிதாகி வருகிறது. அனைத்து கிராமங்களும் அருகில் உள்ள நகரங்களுடன் பேருந்து வசதி மூலம் இணைக்கப்பட்டு விட்டதாலும், கிராமங்களிலும், நகரங்களிலும் தொழிற்சாலைகள் மற்றும் கட்டிட வேலைகள் அதிகமாகி வருவதாலும் பண்ணை வேலையாட்கள் கிடைப்பது சிரமமாகி வருகிறது. எனவே பல்வேறு பண்ணை வேலைகளைச் செய்வதற்குத் தகுந்த கருவிகளையும் பயன் படுத்த வேண்டிய கட்டாய சூழ்நிலை உருவாகி வருகிறது.

இச்சூழலில் பல்வேறு பண்ணை பணிகளை செய்யக்கூடிய பலவிதமான பண்ணைக்கருவிகள் விவசாயிகளிடையே பிரபலமாகி வருகிறது. கிராமப்புற இளைஞர்கள் தொழில் முனைவதற்கான பண்ணைக் கருவிகள் தொடர்புடைய வாய்ப்புகள் குறித்து கீழே தரப்பட்டுள்ளது.

**1. கருவிகள் உற்பத்தி செய்தல்**

தொழிற்பயிற்சி பயின்ற அல்லது பணிமனையில் பணிபுரிந்த அனுபவம் உள்ள இளைஞர்களுக்கு சிறிய பண்ணைக்கருவிகளை கிராம அளவில் உற்பத்தி செய்து விற்பனை செய்ய பிரகாசமான வாய்ப்புகள் உள்ளது. அதிக ஆட்கள் தேவைப்படும் பணியான களையெடுத்தல் பணிக்கு கையால் இயக்கும் பல்வேறு சிறிய களையெடுக்கும் கருவிகள் விவசாயிகளிடையே பிரபலமாகி வருகிறது. இதுபோன்ற களையெடுக்கும் கருவிகள் நூற்றுக்கணக்கில் ஒவ்வொரு கிராமங்களிலும் தேவைப் படுவதால், இக்கருவிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய நல்ல வாய்ப்புள்ளது. இதுபோன்ற கீழ்கண்ட சிறிய கையால் இயக்கும் கருவிகளை உற்பத்தி செய்வது எளிதான பணி ஆகும்.

- நெல்லில் களையெடுக்கும் கோனோ வீடர்
- நெல்லில் களையெடுக்கும் டிரம் வீடர்
- நெல்லில் களையெடுக்கும் விரல் வடிவ களையெடுக்கும் கருவி

- திருத்திய நெல் சாகுபடிக்கான நடவு குறியீட்டுக்கருவி
- நீண்ட கைப்பிடி கொண்ட களையெடுக்கும் கருவிகள்
- தேங்காய் மட்டை உரிக்கும் கருவி
- கரும்பு தோகை நீக்கும் கருவி
- கரும்பு கரணை வெட்டும் கருவி
- கையால் இயங்கும் தட்டு வெட்டும் கருவி

மேற்சொன்ன கருவிகளை உற்பத்தி செய்வது குறித்த ஒருவார கால பயிற்சி வேளாண் இயந்திரங்கள் ஆராய்ச்சி மையத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

### 2. இயந்திரங்கள் வாடகைக்கு விடுதல்

இன்றைய காலகட்டங்களில் விவசாய பணிகளுக்கு பயன் படுத்தப்படும் பல்வேறு இயந்திரங்களின் விலை மிக அதிகமாக இருப்பதாலும், அத்தைகய இயந்திரங்களின் பயன்பாடு ஒவ்வொரு விவசாயிகளுக்கும் குறைந்த மணி நேரங்களே இருப்பதாலும் விவசாயிகள் இத்தகைய விலை உயர்ந்த இயந்திரங்களை வாங்குவதற்கு முன் வருவதில்லை. அதே சமயத்தில் பண்ணை பணிகளை செய்வதற்கு இயந்திரங்கள் தேவைப்படுவதால் விவசாயிகள் வாடகைக்கு நாடுகின்றனர். கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாகவே டிராக்டர் வாடகைக்கு விடுவது புழக்கத்தில் உள்ளது. இது போலவே, தற்பொழுது கீழே தரப்பட்டுள்ள இயந்திரங்கள் வாடகைக்கு விடுவது பழக்கத்தில் வந்து கொண்டுள்ளது.

- நெல் அறுவடை செய்யும் கூட்டு அறுவடை இயந்திரம்
- நெல் நாற்று நடவு செய்யும் கருவி
- இஞ்சினால் இயங்கும் நெல்லில் களையெடுக்கும் கருவி
- டிராக்டரால் இயங்கும் விதை விதைக்கும் கருவி
- பலபயிர் கதிரடிக்கும் கருவி
- பண்ணை கழிவுகளை தூளாக்கும் கருவி
- நாற்று நடும் கருவிக்கு நாற்று விடும் கருவி
- கரும்பு நடவு செய்யும் இயந்திரம்
- இஞ்சினால் இயங்கும் களையெடுக்கும் கருவி
- மருந்து தெளிக்கும் கருவிகள்
- நேரடி நெல் விதைக்கும் கருவி
- மற்றும் இதர கருவிகள்

இவ்வியந்திரங்களை வாங்குவதற்கு வேளாண் பொறியியல் துறை மூலம் மானியம் வழங்கப்படுகிறது. மேலும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் இவ்வியந்திரங்களை வாங்குவதற்கு

கடனுதவி செய்ய முன்வருவதால், கிராமப்புற இளைஞர்கள் அந்தந்த பகுதிக்கு தேவையான இயந்திரங்களை வாங்கி வாடகைக்கு விடலாம். இதன்மூ:லம் கணிசமான வருவாயும் கிடைக்கும். வேளாண் இயந்திரங்களைப்பற்றிய தொழில் நுட்ப ஆலோசனை வேளாண் இயந்திரங்கள் ஆராய்ச்சி மையம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

**3. கருவிகள், இயந்திரங்களை 'பழுது நீக்குதல்' மையங்களை அமைத்தல்**

வேளாண்மைத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் கால்நடைத்துறை மூலம் பல்வேறு விவசாயக்கருவிகள், இயந்திரங்கள் மானியம் மூலம் விவசாயிகளுக்கு அதிகளவில் வழங்கப்பட்டு வருகிறது. கருவிகளின் பயன்பாடு அதிகரித்து வரும் வேளையில் கருவிகளின் பழுது நீக்கும் தேவையும் அதிகரித்து வரும். எனவே அந்தந்த பகுதியில் அதிகளவில் பயன்படுத்தும் கருவிகளின் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கும் மையங்கள் அமைத்து சேவை வழங்கலாம். இயந்திரங்களை பராமரிக்க பழுது நீக்க அவ்வியந்திரங்களை விற்பனை செய்யும் நிறுவனங் களும், வேளாண் அறிவியல் நிலையங்கள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் ஆராய்ச்சி மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலமும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய பயிற்சியை மேற்கொண்டு விவசாய கருவிகள் பராமரித்தல் மற்றும் பழுது நீக்கும் மையங்களை அமைத்து நிரந்தர வருவாய் பெறுவதோடு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் அளிக்கலாம்.

இளைஞர்களே இத்தகைய தருணத்தில் மேற்சொன்ன வழிமுறைகள் ஏதாவது ஒன்றினையோ அல்லது இரண்டு அல்லது மூன்றையுமோ மேற்கொண்டு நிரந்தர வருமானம் பெற்று, மற்றவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தருவதோடு இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு உதவிக்கரமாக இருங்கள்.

தகவல் : *முனைவர் த.செந்தில்குமார், முதன்மை விஞ்ஞானி, முனைவர் கோ.மணிகண்டன், முதுநிலை ஆராய்ச்சியாளர், முனைவர் சையது இம்ரான், முதுநிலை விஞ்ஞானி, மத்திய வேளாண் பொறியியல் நிறுவனம், மண்டல மையம், வீரகேரளம் சாலை, கோயமுத்தூர் – 641 007.*

# தென்னை பயிரைத் தாக்கும் நோய்கள்

**அடித்தண்டழுகல் நோய் :** கேனோடெர்மா லூசிடம் மற்றும் கேனோடெர்மா அப்பிளனேட்டம்



**தாக்குதலின் அறிகுறிகள்**

● தஞ்சாவூர் வாடல் (கேனோ டெர்மா வாடல்) நோயின் ஆரம்ப நிலை அறிகுறிகள் வாடல், ஓலைகள் மஞ்சள் நிறமடைதல், வெளிச்சுற்று இலைகள் தொங்கி விடுதல் ஆகியவற்றுடன் தொடங்குகிறது.

● அதைத்தொடர்ந்து தண்டின் அடிப்பாகத்தின் வெடிப்புகள் வழியாக செஞ்சிவப்பு நிற சாறு கசிந்து, அது மேல்நோக்கி பரவும். கசியும் பகுதியின் திசுக்கள் மென்மையாக இருக்கும்.

● சாறு கசியும் பகுதியில் உள்ள திசுக்கள் அழுகி, தண்டின் அடிப்பகுதியும் அழுகிவிடும்.

● மரப்பட்டை எளிதில் உடையக்கூடியதாக மாறி, அடிக்கடி செதில்களாக உரிந்து திறந்தவெளி வெடிப்பு மற்றும் பிளவுகள் தோன்றும். மரத்தின் உட்பகுதி திசுக்கள் நிறமிழந்து, சிதைந்து, துர்நாற்றம் வீசும்.

● தண்டின் அடிப்பகுதியில் அரைத்தட்டு காளான் வித்து தோன்றும். கடைசியில் மரம் மடிந்து விடும்.

**கட்டுப்படுத்தும்முறை**

**உழவியல் முறை**

● நோய் பாதிக்கப்பட்ட மரங்களை அகற்றி அழித்து விட வேண்டும்

● பசுந்தாள் உரங்களை வளர்த்து தென்னை பூக்கும் பருவத்தில் தோப்பிலேயே அவற்றை உழுது விட வேண்டும்.

● ஒரு மரத்திற்கு, ஒரு வருடத்திற்கு மரத்தை சுற்றி 4 அடி தள்ளி பள்ளம் தோண்டி மரத்தை தனிமைப்படுத்த வேண்டும்.

**உயிரியல் முறை**

● சூடோமோனாஸ் ஃப்ளோரசன்ஸ் (பிஎஃப் –1) ஐ மரத்திற்கு 200 கி வீதம், 200 கி டிரைகோடெர்மா விரிடி உடன் சேர்த்து இடலாம்.

● 200 கி பாஸ்போபாக்டர், 200 கி அசோட்டோபாக்டர் ஐ 50 கி.கி தொழு உரத்துடன் கலந்து இடலாம்.

● தொழு உரம் 50 கி.கி வேப்பம் புண்ணாக்கு 5 கி.கி வீதம் 6 மாதத்திற்கு ஒரு முறை இடலாம்.



**இரசாயன முறைகள்**


● தண்டின் சாறு கசியும் பகுதிகளை செதுக்கி டிரைடிமார்ஃப் 5% கொண்டு பாதுகாக்கலாம். அதைத் தொடர்ந்து சூடான தாரை ஊற்றலாம்.

● ஆரியோபங்கின் 2 கி + காப்பர் சல்பேட் 1 கி + 100 மில்லி தண்ணீரில் கலந்து அல்லது 2 மில்லி டிரைடிமார்ஃப் + 100 மில்லி தண்ணீர் அல்லது 1 மில்லி ஹெக்சகோனசோல் + 100 மில்லி தண்ணீர் கலந்து வேர் மூலம் செலுத்தலாம். (பென்சில் தடிமனுள்ள நன்கு உறிஞ்சும் தன்மையுள்ள வேரை தேர்வு செய்து சாய்வாக வெட்டவேண்டும். மருந்தை பாலித்தீன் பை அல்லது பாலித்தீன் பாட்டிலில் எடுத்து வேர் அதனுள் நனையும்படி வைக்க வேண்டும்.

● மரத்தை சுற்றி 1.5 மீட்டர் தூரத்தில் 1% போர்டோ கலவையை 40 லி என்ற அளவில் ஊற்றி மண்ணை நனைக்க வேண்டும்.

**குருத்தழுகல்நோய் : ஃபைட்டோப்தோரா பால்மிவோரா**

**தாக்குதலின் அறிகுறிகள்**



● இளங்கன்றுகளில், குருத்துகள் பழுப்பு நிறமாக மாறும், மெது வாக இழுத்தாலே கையோடு வந்துவிடும்

● இலையின் அடித்திசுக்கள் விரைவில் அழுகி, உச்சியிலிருந்து எளிதில் பெயர்ந்து விடும்.

● நோய் முற்றிய நிலையில் குருத்துக்கள் வாடி, உதிர்ந்து விடும்.

● உச்சியில் உள்ள இளம் இலைகளின் அடிப்பகுதி மற்றும் உச்சியில் உள்ள மென்மையான திசுக்கள் அழுகி வழவழப்பாக மாறி துர்நாற்றம் வீச துவங்கும்.

● முடிவில் உச்சிப் பகுதி அடியோடு சாய்ந்து, மரம் மடிந்து விடும்.

● பெரிய மரங்களில், குருத்துகள் பழுப்பு நிறமாகி, அடிப்பகுதி பலமிலந்து தொங்கிவிடும். அழுகல் மெதுவாக கீழ்நோக்கி பரவி இறுதியில் நுனிப்பகுதியை பாதித்து மரத்தையும் அழித்து விடும். இதையடுத்து சுற்றியுள்ள இலைகள் தொங்கிவிடும். இருந்தாலும் மரத்தில் எஞ்சியிருக்கும் காய்கள் முதிர்ச்சியடையலாம்.

### கட்டுப்படுத்தும் முறை

### உழவியல் முறை

● போதுமான வடிகால்வசதியை ஏற்படுத்த வேண்டும்.

● நோய் அதிகம் உள்ள தோட்டத்தில் தகுந்த இடைவெளி விட்டு அதிக நெருக்கத்தை தவிர்க்க வேண்டும்.



### இரசாயன முறைகள்

● நோய் தாக்கப்பட்ட கொண்டை பகுதியை அகற்றிவிட்டு, 0.25% காப்பர் ஆக்ஸிகுளோரைடை ஊற்றி கொண்டைப் பகுதியை நனைக்க வேண்டும். புதிய குருத்து வரும் வரை போர்டோ பசை தடவி மழைநீர் படாதவாறு பாதுகாக்க வேண்டும். (1 லி போர்டோ பசை தயாரிக்க 100 கி காப்பர்சல்பேட் மற்றும் 100 கி நீர்த்த சுண்ணாம்பை தனித்தனியே 500 மில்லி தண்ணீரில் கரைத்து, இரண்டையும் ஒன்றாக கலக்க வேண்டும்).

● தடுப்பு நடவடிக்கையாக பருவமழை தொடங்குவதற்கு முன் 0.25% காப்பர் ஆக்ஸிகுளோரைடை நோய் பாதித்த மரத்திற்கு அருகில் உள்ள மரத்தின் கொண்டையில் தெளிக்க வேண்டும். 1% போர்டோ கலவையை நோய் தாக்கப்பட்ட மற்றும் அருகில் உள்ள மரங்களின் மீது தடுப்பு நடவடிக்கையாக தெளிக்கலாம். காப்பர் பூஞ்சை கொல்லியால் எளிதில் பாதிக்கப்படக்கூடிய மரங்களை (குட்டை ரகங்கள்) மேன்கோசெப் கொண்டு பாதுகாக்கலாம். சிறிய, துளையுள்ள பைகளில் 2 கிராம் மேன்கோசெப் வைத்து ஓலை தண்டுடன் இணையுமிடத்தில் கட்டி விடலாம். மழை பெய்யும்போது பையிலிருந்து மருந்து சிறிது சிறிதாக வெளிவரும். இதன் மூலம் மரத்தை பாதுகாக்கலாம்.

● உச்சியில் உள்ள நோய் பாதிக்கப்பட்ட பகுதிகளை அகற்றி விட்டு அதன் பின்போர்டோ பசை தடவலாம் அல்லது 1 சதம் போட்டோ கலவையை உச்சியில் நன்கு படும்படி மழைக்கு முன் தெளிக்கலாம்.

● பருவமழைக்கு பின் 0.25 காப்பர் ஆக்ஸி குளோரைடை தெளிக்கலாம்.

தகவல் : ***நிகிதா.மா, சௌமியா.க, நான்காம் ஆண்டு மாணவர்கள், ஜெயமுருகன் செ, உதவிப் பேராசிரியர் (பயிர் நோயியல் துறை), கிருஷ்ணா வேளாண் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, ஸ்ரீரெங்கபுரம், மதுரை – 625 532.***


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம்
கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396